செ.வெ.எண் : 12/நவம்பர் நாள்: 11.11.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**கால்நடை பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 11 ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக செயல்பட்டு வரும் 55 கால்நடை மருந்தகங்களில் நவம்பர் 2020 முதல் பிப்ரவரி 2021-க்குள் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நடைபெறவுள்ளது.

இச்சிறப்பு முகாம்களில் செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சை, தடுப்பூசிப்பணி, குடற்புழு நீக்கம் ஆகிய சிகிச்சைகள் கால்நடைகளுக்கு வழங்கப்படவுள்ளது. மேலும் கால்நடைகளுக்கு தேவையான தாது உப்புக்கலவை இலவசமாக வழங்கப்படும். சிறந்த முறையில் கலப்பின கிடேரி கன்றுகளை வளர்ப்பவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படவுள்ளது. கால்நடைகளுக்கான இச்சிறப்பு முகாமினை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**